ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024.02.29 |

# கட்டடவாக்கத் தொழிற்துறைக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் - 2024 சனவரி

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண், 52.9 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்திருந்த மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 சனவரியில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.** 2022 சனவரி தொடக்கம் முதற் தடவையாக நடுநிலையான அடிப்படை அளவினை இச்சுட்டெண் விஞ்சிச்சென்றமையை இது அடையாளப்படுத்துகின்றது. மாதகாலப்பகுதியில் புதிய கட்டடவாக்கப் பணி படிப்படியாகக் கிடைக்கப்பெறுகின்றமையாக இருக்கின்ற அதேவேளை, இடைநிறுத்தப்பட்ட சில கருத்திட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்டளவில் மீளத்தொடங்கப்பட்டன என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

புதிய கட்டளைகள், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் சனவரியில் அதிகரித்தன. தற்போது, வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் தனியார் நிதியளிக்கப்பட்ட உள்நாட்டுக் கருத்திட்டங்கள் ஆகிய இரண்டும் கிடைக்கப்பெறுகின்றமை உயர்வானதாகும் என அநேகமான பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, மொத்த நடவடிக்கை மற்றும் புதிய கட்டளைகள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புகளுக்கிசைவாக கொள்வனவுகளின் அளவு மாதகாலப்பகுதியில் மீட்சியடைந்தது. எதுஎவ்வாறிருப்பினும், பிரதானமாக பெறுமதிசேர்க்கப்பட்ட வரிக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் தாக்கத்தின் காரணமாக பொருட்களின் விலைகளில் அதிகரிப்புக்கள் பரந்தளவில் எடுத்துக்காட்டப்பட்டன. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் நீட்சியடைந்து காணப்பட்டது.

**கொமுசு தொகுப்பு: கட்டடவாக்க அளவீடு**


| மாறி | திசெ. 2023 | சன. 2024 | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **48.6** | **52.9** | + | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| புதிய கட்டளைகள் | 45.8 | 55.7 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 40.3 | 42.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 47.2 | 55.7 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.4 | 51.4 | = | நீட்சியடைகின்றது, அதே வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான தொழிற்துறையின் எதிர்கால வாய்ப்பானது பிரதானமாக அதிகரிக்கப்பட்ட கருத்திட்டவாய்ப்புக்களின் காரணமாக சாதகமாகக் காணப்படும்.

**கொமுசு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**52.9**
**2024 சனவரி**

**கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**



மூலம்: இலங்கை மத்திய வங்கி

## உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தொகுப்பு - கட்டடவாக்கம்

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | சீர்குலைந்தள்ளது, உயர்வான வீதத்தில் |
| பிரான்ஸ் | சீர்குலைந்தள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஜேர்மனி | சீர்குலைந்தள்ளது, உயர்வான வீதத்தில் |
| அயர்லாந்து | சீர்குலைந்தள்ளது, மெதுவான வீதத்தில் |
| இத்தாலி | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | சீர்குலைந்தள்ளது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 பெப்புருவரி 28 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் அளவு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.